**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 166/2023**

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ம் நாள் வியாழக் கிழமை PW2 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 03.07.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | சர்மிளா ( PW2) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது | |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

04.12.2008 கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆகவும்

04.12.2008 கொதுவை ஒப்பந்தம் வா.சா.ஆ. 2 ஆகவும்

04.12.2008 பிரதிவாதிகளின் கடன் ஏற்பாட்டு கடிதம் வா.சா.ஆ. 3 ஆகவும்

04.12.2008 பிரதிவாதியின் பொறுப்புறுதி ஆவணம் வா.சா.ஆ. 4 ஆகவும்

10.11.2011 பிரதிவாதியின் உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ. 5 ஆகவும்

30.09.2013 பிரதிவாதியின் உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ. 6 ஆகவும்

20.07.2016 பிரதிவாதியின் உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ. 7 ஆகவும்

25.04.2019 பிரதிவாதியின் உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ. 8 ஆகவும் ( வா.சா.ஆ. 5 முதல் 8 வரை உள்ள உயிர்ப்பு கடிதங்களில் காணப்படும் கையெழுத்து 2 வது பிரதிவாதியுடையது அல்ல என்றும் முதல் பிரதிவாதி உயிர்ப்பு கடிதம் எழுதிக் கொடுத்ததாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது குறித்த ஆட்சேபணையுடன் குறியிடுசெய்யப்படுகிறது. ஆட்சேபணை குறித்து தீர்ப்பின் போது பரிசீலிக்கப்படும் )

19.02.2020 கணக்கு பட்டியல் உண்மை நகல் வா.சா.ஆ.9 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்வாக வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.